# மின்சார பாதிப்புக்குள்ளான நடனக் கலைஞருக்கு மறுவாழ்வு

## மியாட் மருத்துவமனை சாதனை

**சென்னை, மார்ச் 28:** தீவிர மின் விபத்து காரணமாக பாதிப்புக் குள்ளான நடனக் கலைஞரின் இத யத்தை மீண்டும் துடிக்க வைத்து சென்னை மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் மறுவாழ்வு அளித் துள்ளனர்.

இது தொடர்பாக மியாட் மருத்துவமனையின் தலைவர் மல் லிகா மோகன்தாஸ், தீவிர சிகிச் சைப் பிரிவின் இயக்குநர் டாக்டர் டி.பி.நிஷீத் ஆகியோர் கூறியதா வது:

சென்னையைச் சேர்ந்த நடனக் கலைஞரான பாலாஜி (29), தனது நடனப் பள்ளியின் அறிவிப்புப் பலகையை கடந்த பிப்ரவரி முதல் வாரம் பொருத்த முயற்சி செய்யும் போது உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்து பாதிக்கப்பட்டார். அவ ரது சகோதரரும் நண்பர்களும் உடனடியாக மியாட் மருத்துவம னையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் 15 நிமிடங்களில் சேர்த்தனர்.

மருத்துவமனைக்கு பாலாஜியை கொண்டு வந்தபோது, அவருக்கு சுவாசம் இல்லை. இதயம் துடிக் கவும் இல்லை. இந்த நிலையில் மியாட் டாக்டர் அவரது மார்புக் கூட்டினை இயன்ற அளவு கடின மாகவும் வேகமாகவும் பல முறை அழுத்தினார். மின் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

இவ்வாறு 10 நிமிஷம் தொடர்ந்து அடிப்படை மருத்து வச் சிகிச்சை அளிக்கப்படவுடன் அவரது இதயம் மீண்டும் துடிக்கத் தொடங்கியது. என்றாலும் இத யத் துடிப்பு மிகவும் சொற்பமாக வும் நலிவுற்றும் இருந்தது. பாலா ஜியின் ரத்த அழுத்த நிலையைச் சீராக்க வென்டிலேட்டர் உள் ளிட்ட நவீன உயிர் காக்கும் சாத னங்களும் மருந்துகளும் தேவைப் பட்டன.

**மூளையிலும் சிறு பாதிப்பு:** மின்சாரம் பாய்ந்ததன் காரண மாக ரத்த விநியோகத்தில் தடை ஏற்பட்டு, மூளை செல்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை டாக் டர்கள் கண்டுபிடித்தனர். இதை யடுத்து பாலாஜியின் உடல் ஐஸ் கொண்டு பேக் செய்யப்பட்டு, வெப்ப நிலை 92 டிகிரி பாரன்ஹீட் டுக்குக் கீழ் கொண்டு செல்லப்பட் டது.

ரெப்யூட்டிக் ஹைபோதெர் மியா என்று அழைக்கப்படும் சிகிச்சை முறை காரணமாக மூளை தீவிரமாக சேதமடைவது தடுக்கப் பட்டது.

**3-வது நாள்:** தொடர் சிகிச்சைக் குப் பிறகு, 3-வது நாள் பாலாஜி யின் இதயம் நிலைப்பட்டது. எனி னும் உணர்வற்ற சீரான சுவாசமே நீடித்தது. மயக்க மருந்துகளை நிறுத்தியதால் வலிப்புகள் ஏற்பட் டன. வலிக்கு உணர்வு இல்லை. கண்களைத் திறக்கவில்லை. எம் ஆர் ஐ ஸ்கேன் எடுத்துப் பார்த்த போது மூளை பாதிக்கப்பட்டிருப் பதைக் கண்டுபிடித்தோம்.

தொடர் சிகிச்சைக்குப் பிறகு, 6-வது நாள் அவர் கண்களைத் திறந்தார். வென்டிலேட்டரை எடுத்துவிட்டு, டிரக்கியாஸ்டமி எனப்படும் கழுத்தில் துளையி டும் சிகிச்சை அளிக்கப்பட்டது. மருந்து, சிகிச்சைகள் காரணமாக வலிப்புகள் நின்றன. கைகள்- கால் களை அசைக்கவும் பயன்படுத்த வும் அவரால் முடிந்தது. 20 நாள்க ளுக்குப் பிறகு அவரால் பேச முடிந் தது. ஒரு மாதத்துக்குப் பிறகு பிப்ர வரி கடைசி வாரத்தில் அவர் மருத் துவமனையிலிருந்து வீடு திரும்பி னார் என்று அவர்கள் தெரிவித்த னர்.

"இன்னும் 8 மாதங்களுக்குள் பழையபடி என்னால் நடன நிகழ்ச் சிகளை நடத்த முடியும்" என்றார் பாலாஜி.



சென்னை மியாட் மருத்துவமனையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் (இடமிருந்து) மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், மறுவாழ்வு பெற்ற பாலாஜி, டாக்டர் நிஷீத்.